ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2268/87 - 2022 පෙබරවාරි මස 25 වැනි සිකුරාදා - 2022.02.25
2268/87 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 21/1978 (X) (அ)

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் 25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் PB 4833 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழ் அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2021, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 2224/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதற்கான நிரல் I இல் காணப்படுகின்ற "பொதுச் சுகாதாரத்தில் மற்றும் போஷணையில் கௌரவ விஞ்ஞான இளமாணி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன் :-

#### அட்டவணை I

நிபந்தனைகள்

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, தரவு விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் -

    (அ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞான பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமை; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியொன்றுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ. த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகள்.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| தரவு விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி கௌரவ (தரவு விஞ்ஞானம்) |

**தினேஷ்குணவர்த்தன,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, பெப்புருவரி 23.

EOG 02-0659